# சமாதான பேச்சுக்களை அரசு பயன்படுத்துகிறது


விலை ரூபா 5-00

# ஈழநாடு

**EELANADU**
**NATIONAL TAMIL DAILY**

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 3 இதழ் 68
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 16-04-1995


(யாழ்ப்பாணம்)

தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுக்களை சிறிலங்காவின் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தொழில் முதலீடுகளைச் செய்வதற்காக சிறிலங்கா அரசு பயன்படுத்துவதாக பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் கொழும்பில் கடந்த ஆண்டு நடந்த குண்டு வெடிப்புகள் மற்றும் வன் செயல்களால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடுகளைச் செய்யத் தயங்குகின்றனர். அத்துடன் பல முதலீட்டாளர்கள் தமது நிறுவனங்களை மூடினர். தற்போது நடைபெற்றுவரும் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் தமிழ்மக்களுக்கு சாதகமாக இல்லாதபோதும் சமாதானப் பேச்சுக்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் விரிவாக பிரசாரம்

(5ம் பக்கம் பார்க்க)

## அரசியல் தலைவர்களுக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அரசியல் பிரமுகர்கள், அமைச்சர்கள் போன்றோருக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது

இதன் ஒரு கட்டமாக மேற்குறிப்பிட்டவர்களின் இல்லங்களுக்கு அருகில் வசிக்கும் தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனராம்.

இந்த அரசியல் பிரமுகர்களின் நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் கூட்டங்கள் மற்றும் பொது வைபவங்களில் கலந்து கொள்வதும் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ரி சி

## பேச்சுக்களில் அவநம்பிக்கை

# போருக்கு தயாராகும் பணியில் இராணுவம் ஈடுபட்டு வருகிறது

[கொழும்பு]

அரசுக்கும்–விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப்பேச்சுக்களில் அவநம்பிக்கை கொண்டுள்ள இராணுவ தலைமை மற்றொரு போருக்கு படையினரை தயார்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள நான்கு கோரிக்கைகளில் போக்குவரத்து பாதை திறப்பு, கிழக்கில் போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடல் தொடர்பான விடயங்களில் அரசு விட்டுக் கொடுக்கும் நிலையில் இல்லாததால் புலிகளும் கடும் போக்கை கையாளக்கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளது.

இந்நிலையில் அடுத்த கட்டப் பேச்சுக்களிலோ அல்லது பின்போ இது தீர்க்கமுடியாத விடயமாகிவிடுமென இராணுவ தலைமை கருதுவதால் மற்றொரு போரை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுமென படையினருக்கு தெரிவிக்கப்பட்டு வருகிறதாம்.

(6ம் பக்கம் பார்க்க)

கொழும்பில்

## தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் கைது

(கொழும்பு)

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹோட்டல்கள், மற்றும் பொது இடங்களில் தங்கியிருக்கும் தமிழ் இளைஞர்களும் கொழும்பு வந்ததற்கான உகுந்த காரணம் காட்டத் தவறியவர்களும் கைது செய்யப்பட்டுகிறார்களாம்.

இதேவேளை கொழும்பில் தமிழர்கள் பெருமளவில் வாழும் பகுதிகளில் மாலை

(6ம் பக்கம் பார்க்க)

## தலைவரின் பதிலின் பின்பே 5ம் கட்ட பேச்சு தீர்மானிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா விடுதலை புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனுக்கு கடந்த 12-ம் திகதி எழுதிய கடிதத்திற்கு பதில் கிடைத்ததும் அடுத்தகட்ட பேச்சுவார்த்தை பற்றி தீர்மானிக்கப்படவுள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நான்கு கட்டப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த போதிலும் பேச்சுவார்த்தைகள் எதிர்பார்த்த வெற்றியை தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி சந்திரிகா தற்போது கடல்வலய தடை, எரிபொருள் தடை போன்ற

(6ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் நேற்று பரவலாக வன்முறை

[சென்னை]

சென்னையிலுள்ள இந்து முன்னணிக் கட்டிடம் நேற்று முன்தினம் குண்டுவைத்து தகர்க்கப்பட்டதையடுத்து தமிழகத்தின் பல இடங்களில் நேற்று பரவலான வன்முறைகள் இடம்பெற்றன.

இந்த வன்முறைகளில் நான்குபேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்த

(6-ம் பக்கம் பார்க்க)

திருமலையிலும்

## இராணுவமுகாம்கள் பலப்படுத்தப்படுகிறது

[திருமலை]

திருமலை மாவட்டத்திலுள்ள இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருவதுடன் விசேட இராணுவப்பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் புதிதாக பல இராணுவத்தினர் குவிக்கப்பட்டு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன,

திடீர்த் தாக்குதலை சமாளிப்பது எதிர்கொள்வது போன்றவற்றில் விசேட பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரி சி

## ‘ஜெரி’ வீட்டுப் படத்துடன் இளம்பெண் கொழும்பில் கைது

(கொழும்பு)

இராணுவத் தளபதி ஜெரி டி சில்வாவின் வீட்டின் படத்தை வைத்திருந்த இளம் பெண் ஒருவரை கொழும்பில் வைத்து படையினர் கைது செய்துள்ளனர்.

இராணுவ தளபதியின் வீட்டின படத்தை இவர் என்ன காரணத்திற்காக புகைப்படம் எடுத்தார் என்பது குறித்து தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக நாட்டின் முக்கிய தலைவர்களது வாசஸ்தலங்களையும் மற்றும் முக்கிய இடங்களையும் படமெடுத்த பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட பலர் தொடர்ந்தும் தடுத்து வைக்

(6-ம் பக்கம் பார்க்க)

ஊழல். லஞ்சம். மோசடி

## ஜெயலலிதாவுக்கு எதிராக கருணாநிதியும்மனுகையளிப்பு

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மற்றும் அவரது அமைச்சர்களுக்கு எதிராக இருபத்தெட்டு லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுகள் அடங்கிய புகார் அறிக்கையை மாநில ஆளுநர் சென்னா ரெட்டியிடம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி நேற்றுக் கையளித்தார்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது; இந்தக் குற்றச் சாட்டுகளின் அடிப்படையில் லஞ்ச ஊழல் தடுப்புச் சட்டம் 19வது பிரிவின் கீழும், குற்றவியல் நடைமுறை 197 வது பிரிவின் கீழும் செல்வி ஜெயலலிதா மீது வழக்குத்தொடர அனுமதிக்குமாறு ஆளுநரை திராவிட முன்னேற்றக் கழகம் அவ்வறிக்கையில் கோரியுள்ளது.

அரச நிலத்தில் ஜெயா பதிப்பகத்திற்கு சட்டவிரோதமாக வழங்கியது. தமிழ்நாடு பாட நிறுவனம் வழங்கிய ஒப்பந்தங்களில் லஞ்சம் இடம்

(5ம் பக்கம் பார்க்க)

## வாடகைக் கொலையாளிகள் கொழும்பில் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பெருமளவு பணத்தை பெற்றுக் கொண்டு கொலைகள் புரியும் வாடகை கொலையாளிகளின் தொகை அதிகரித்து வருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதனால் கலைஞர்கள், வியாபாரிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வெளிவந்துள்ளது

A/L மாணவருக்கு உகந்த பகுதி II இற்கான விஞ்ஞானிகளும், கண்டுபிடிப்புகளும் தொகுப்பு க. சத்தியசீலன் [யாழ் பல்கலைக்கழகம்) விற்பனை பாலாஜி, யாழ்ப்பாணம். [ஏ-4868]

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit's) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1420)

### தவறிவிட்டது

10-04-95 திங்கள் அன்று ஓமந்தை பஸ் நிலையத்தில் எனது கறுப்புநிற Bag உடன் புதிய உடுப்புகளும், முக்கியமாக வவுனியா இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரி விரிவுரைக் குறிப்புகள் உடன் தவறிவிட்டது. தயவு செய்து யாராவது அதனைக் கண்டெடுத்திருந்தால் கீழ்க்காணும் விசாசத்திற்கு தொடர்ப கொள்ளவும். பூ. பகீரதி, மே/பா, பூ சுரேஸ்வரன், இணுவில் தெற்கு, இணுவில். (சி 1451)

## புத்தாண்டு தின விழா

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேசச் செயலகம் நடாத்தும் தமிழ்புத்தாண்டு தின விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு சுன்னுகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

## தங்கப்பதக்கம் பெற்ருர்

(நெலவியடி)

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டும் போட்டியில் 400 மீற்றர் தூரத்தை 50.07 செக்கன்களில ஓடி சாதனையை நிலைநாட்டிய வடமராட்சியைச் சேர்ந்த இளைஞருக்கு கொழும்பு சுகததாச உள்ளரங்கில் தஙகப்பதக்கம் வழங்கப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல்துறை மாணவனும், கரவெட்டியைச் சேர்ந்தவருமான அருமைத்துரை அகிலன் என்னும் இளைஞரே கடந்த 1ம்' 2ம் திகதிகளில் இடம்பெற்ற போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்றவராவர். 160-சி

# றெயில்வே ஓய்வூதியம் கச்சேரிக்கு மாற்றம்

(மானிப்பாய்)

யாழ் மாவட்டத்தில் புகையிரதத் திணைக்கள ஒய்வூதியம் பெறும் சகல ஒய்வூதியர்களினதும் ஒய்வூதியம் இவ்வருடம் பங்குனி மாதத்திலிருந்து யாழ். கச்சேரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதன் காரணமாக செயலக ஒய்வூதியக் கொடுப்பனவுக் கிளையில் நேரில் வந்து தங்கள் கோவையைத் திறந்தவர்களுக்கு பங்குனி, சித்திரை மாதங்களுக்குரிய ஒய்வூதியம் அவர்களுக்குரிய வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை தங்கள் ஒய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்களும் கோவை திறக்காதவர்களும் ஒய்வூதியக் கொடுப்பனவுகிளைக் கணக்காளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 71-ரி

# மேலும் 321 அகதிகள் யாழ். வந்து சேருவர்

(திருநெல்வேலி)

இம்மாதம் 26ம் திகதி இந்தியாவிலிருந்து மேலும் ஒரு தொகுதி அகதிகள் யாழ். வந்து சேர உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிலிருந்து வந்து தற்போது வவுனியாவில் தங்கியிருக்கும் 99 குடும்பங்களைச் சேர்ந்த 321 பேர் யாழ்ப்பாணம் வந்து சேருவார்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவாகளை அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள் அழைத்துவரவுள்ளனர். குருநகர், நெல்லியடி, வல்வெட்டித்துறை, கல்வியங்காடு, உடுப்பிட்டி முதலிய இடங்களைச் சேர்ந்தவர்களே அதிகமானவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை தமிழ் நாட்டிலிருந்து இம்மாதம் ஆயிரக்கணக்கானோர் மன்னருக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (157-ரி)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995—04—15

சனி இரவு

- 8-02 புரட்சிக்குரல்
- 8-05 நிகழ்வும் பகிர்வும்
- 8-20 நேயர் கடிதங்கள்
- 8-30 செய்திகள்
- 8-40 கலந்துரையாடுவோம் ''தேர்வு நோக்கில் இன்றைய தமிழ் மாணவர் கல்விநிலை''

1995—04—16

ஞாயிறு காலை

- 7-02 மாவீரவணக்கம்
- 7-15 களத்தில் மலர்ந்தவை
- 7-30 செய்திகள்
- 7-35 பத்திரிகைச் செய்திகள்
- 7-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995—04—15

சனி மாலை

- 5-01 சிந்தனைச் சிதறல்
- 5-02 எழுச்சிகீதம்
- 5-10 புதியவை
- 5-15 வேங்கையின் நெஞ்சம்
- 5-30 அறிவியல் வினடி வினப் போட்டி
- 6-00 சிந்தனைக்குச் சிலவினடிகள்
- 6-02 பாமாலை
- 6-15 என் தெரிவு
- 6-30 மாலைநிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## புனித நீக்கிலாஸ் திருவிழா

(அரியாலை)

நாவாந்துறை புனித நீக்கிலாஸ் முனிந்திரனின் வருடாந்த திருவிழா இம்மாதம் 29ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன. அதற்கான ஆயத்தங்கள், புனரமைப்பு வேலைகள், திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. -59

## நல்லூரில் இந்துசமயப் பேரவை தலைமையகம்

(திருநெல்வேலி)

இந்துசமயப் பேரவையின் தலைமைச் செயலகம் நேற்று முன்தினம் மாலை நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது.

இந்துசமயப் பேரவைத் தலைவர் ஆத்மஜோதி முத்தையா தலைமையில் இந்த அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது.

நல்லை ஆதீன குருமகாசந்நிதானம் சோமசுந்தர பரமாசாரியசுவாமிகள ஆசியுரை வழங்கினர். -157

## மீட்கப்பட்ட சைக்கிள்கள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை காவல்பணிமனைகளால் மீட்கப்பட்ட துவிச்சக்கரவண்டிகள் பருத்தித்துறை தமிழீழ மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, அதன் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களைக்காட்டிப்பெற்றுக்கொள்ளலாம் என குறித்த மன்றின் நீதியாளர் அறியத் தந்துள்ளார்

# தியாகி அன்னைபூபதி நினைவாக கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதியின் 7ம் ஆண்டு நினைவுதினத்தையொட்டி வட்ட சிற்றூர் ரீதியாக இன்று நடைபெறவுள்ள நினைவுக் கருத்தரங்குகள் வருமாறு:

கருத்தரங்கு நடைபெறும் இடங்கள்: கோண்டாவில் நாராயண ச. ச. நி, நீதவான் குடியிருப்பு சங்கானை, சத்தியக்காடு குடியிருப்பு வடக்கம்பரை, மாவீரர் ச. ச. நி. பொம்மைவெளி, புத்தூர் கிழக்கு குருமரகுருபன் ச. ச. நி. வடலியடைப்பு ச. ச. நி. சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தையடி, தெல்லிப்பளை வட்டம் காளிகோவிலடி.

மாதா கோவிலடி துன்னலை வடக்கு, கரவெட்டி, கட்டைவேலி கோவிற்சந்தை,

பளை மாசார் ச. ச. நி., நவசக்தி ச. ச. நி. மந்துவில் கிழக்கு, கைதடி சீலன்நகர் அப்பன் குடியேற்றத் திட்டம்.

### சிரமதானங்கள்

கொலனி நீர்வேலி தெற்கு, அளவெட்டி மணற்புலம் முகாம், இணுவில் தியேட்டர் முகாம். நீதவான் குடியிருப்பு சங்கானை, சத்தியக்காடு சித்தன்கேணி. -ம

மத்தி கிழக்கு நாடுகளுக்கு

# இலங்கை பணிப் பெண்கள் செல்வதற்கு விரைவில் தடை

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு இளம் பெண்களை வேலைவாய்ப்புக்காக அனுப்புவதை நிறுத்துவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது என்று 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு மத்திய கிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்த தொழிலமைச்சர் அங்கு இளம்பெண்கள் படும் அவஸ்தைகளை நேரில் பார்த்த பின்பே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இருபத்தைந்து வயதுக்குட்பட்ட பெண்களை அனுப்புவதை தடை செய்வதறகு சட்டமூலம் கொண்டு வரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது மத்தியகிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பில் உள்ள 5 லட்சம் இலங்கையர்களில் மூன்றுலட்சம் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-ரி)

ஊழல், கொலை குற்றச்சாட்டுக்களை ஆராய

# ஆணைக்குழு நியமிக்குமாறு சிறிசேன கூரே கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த சிரிசேனகூரே சடந்த காலத்தில் தனக்கெதிராக ஐக்கியதேசியக் கட்சியினரால் சுமத்தப்பட்டுள்ள ஊழல், கொலைக் குற்றச்சாட்டுக்களில் தாம் சம்பந்தப்பட்டுள்ளதா

(5-ம் பக்கம் பார்க்க)


## பழைய செய்தித் தாள்களுக்கான கேள்வி அறிவித்தல்

1972ம் ஆண்டில் இருந்து 1976ம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் பிரசுரமாகி வெளிவந்த அனைத்து பத்திரிகைக்குமான கேள்விகள் கோரப்படுகின்றன. இக்காலப்பகுதியில் தங்களினுல் சேகரிக்கப்பட்டுள்ள

- ★ ஈழநாடு
- ★ வீரகேசரி
- ★ தினகரன்
- ★ தினபதி
- ★ சுதந்திரன

ஏனைய பிற பத்திரிகைகள் (குறைந்தளவெண்ணிக்கையாக இருப்பினும்) இருப்பின் அதற்கான பெறுமதியைக் குறிப்பிட்டு மொத்தம் எவ்வளவு உண்டுஎன்பதை முழு விபரத்துடன்

1—5—95 இற்கு முன் அறியத்தரவும்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

மாவீரர் படிப்பகம்

பலாலி வீதி, கோண்டாவில்

(சி-1446)

## குறிஞ்சி மருந்தகம் யாழ்ப்பாண நகரத்தில்

கிளையொன்றை மங்களகரமாக இன்று ஆரம்பித்து வைககின்றது.

நிகழும் யுவ வருடம் சித்திரைத் திங்கள் 02-ம் நாள்[15 04-1995] சனிக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் வரும் சுபவேளையில்

கேணல் கிட்டு சாலை 558 ம் இலக்க கட்டிடத்தில்

# குறிஞ்சி மருந்தகம்

மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள். நணபர்கள் அனைவரையும் திறப்பு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

தங்களது வரவு எம்மை மகிழ்ச்சிகொள்ள வைக்கும்.

தலைமையகம்;
குறிஞ்சி மருந்தகம்:
பலாலி வீதி, திருநெல்வேலி. (எ 4872)

உங்கள் அன்புக்குப் பாத்திரமானவர்கள்;
வை. கணேசரெத்தினம்,
வை. யோகரெத்தினம்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

மணிவாக்கு

வெற்றியால் ஆணவம் கொண்டவன் தோல்வியை அருகில் அழைக்கிறான்.

- கண்ணதாசன்

# நமது நோக்கு

## கண்காணிப்பு அவசியம்!

''வடபகுதி மீதான பொருளாதாரத்தடை நீக்கம் சரியான முறையில் நடைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டும்!'' எனத் தேசியச் சமாதானச் சபை அரசைக் கோரியுள்ளது.

சமாதானம் உறுதியானதாக, நிரந்தரமானதாக அமைய வேண்டுமாயின், அரசு அறிவிக்கும் திட்டங்கள் நேர்மையான முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழர்கள் கண்டதென்ன?

சொல்லிச் சொல்லிக் காலம் கடத்தப்பட்டதே தவிரக் காரியங்கள் எதுவும் உருப்படியாக நடைபெறவில்லை.

தலை எண்ணித் தீர்மானிக்கும் ஜனநாயகம் எனக் கூறிக் கொண்டு பெரும்பான்மை இனத்தவர்களின் தலைகளை மாத்திரமே இனத்தவர்களின் தலைகளை மாத்திரம் எண்ணிச் செயற்படும் ஒற்றையாட்சி அமைப்பு இருக்கும்வரை இந்த நிலை தொடரத்தான் செய்யும்.

இதனை - தெற்கிலே உள்ள பொது அமைப்புகள் உணரத் தலைப்பட்டது வரவேற்கத்தக்கதே!

ஏனெனில் - ''தமிழர்களுக்குப் போதுமான சலுகைகள் வழங்கப்பட்டு விட்டன; மேலும் வாங்கத் தொல்லை கொடுக்கிறார்கள்!'' என்ற ரீதியில் தான் அரசு பிரசாரம் செய்து வருகிறது.

இதனைத் தெற்கிலுள்ள மக்களும் நம்பி, தமிழ் மக்கள்மீது இன விரோதக் காழ்ப்புணர்ச்சி கொள்ள முற்படுகின்றனர்.

தடை முகாம்களில் நடப்பதென்ன? தடை நீக்கப்பட்ட பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றனவா?

அவசியமானால் - சர்வதேச அவதானிகளுடன் இணைந்து கண்காணிப்பு நடைபெற வேண்டும் என்றும் தேசிய சமாதான சபை கோரியிருப்பது கவனிக்கத்தக்கது.

இலஞ்சம், ஊழல் ஆகிய காரணங்களால், தேவையற்ற தாமதங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என ஏற்கனவே பல புகார்கள் வந்துள்ளன.

அதுமாத்திரமல்ல - தமிழர்களை எப்படியும் நடத்தலாம் என்ற நிலைப்பாட்டை ஊட்டி வளர்த்த காரணத்தால், கெடுபிடிகள் செய்வது தமது கடமைப் பட்டியலில் உள்ள சங்கதி என்ற எழுதாவிதியும் இருப்பதை மக்கள் உணர்வார்கள்.

எனவே - கண்காணிப்புப்பற்றிய கோரிக்கை நியாயமானதே!

# தமிழீழபொருண்மியமேம்பாட்டுநிறுவனம் உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகள் நடத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஆண்டுதோறும் நடாத்தப்பட்டுவரும் உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகளை இம்முறையும் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

ஏப்பிரல் 24-ம் திகதி முதல் 30-ம் திகதி வரையுள்ள இவ் எழுச்சிவார காலப்பகுதி உழைக்கும் மக்களின் செயல் திறமை வெளிப்படுத்தும் ஓர் வாரம் கொண்டாடப்படுகின்றது.

இவ் எழுச்சிவாரத்தை முன்னிட்டு நிலம் உழுதல், நிலம் கொத்துதல், துலா மிதித்தல், மாட்டு வண்டிச் சவாரி ஆகிய விவசாயம் சார் போட்டிகளும், நீச்சல், துடுப்பு வலித்தல். பாய்மரம் ஓட்டுதல், வலைபின்னுதல், தண்டு வலித்தல் போன்ற கடல்வளம் சார் போட்டிகளும் குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல், பனை மரம் ஏறுதல், கூடிய பதனீர் உற்பத்தி ஆகிய பனை தென்னை வள அபிவிருத்தி தொடர்பான போட்டிகளும், கயிறு முறுக்குதல். தும்புத்தடி கூட்டுதல், ஈர்க்கு கட்டுக் கூட்டுதல் போன்ற சிறு கைத்தொழில் போட்டிகளும், வீதி திருத்துதல், வாய்க்கால் திருத்துதல், குளம் புனரமைப்பு போன்ற பொதுவான போட்டிகளும் நடாத்தப்படவிருக்கின்றன.

போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில்களும், தங்கப்பதக்கங்களும், சான்றிதழ்களும், கேடயங்களும் வருகின்ற மேதினப் பொதுக்கூட்டத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன (சி)

## சிவாச்சாரிய பீடாதிபதிதெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை ஒன்றியத்தின் சார்பில் திருகோணமலை கணேசபீடமாகிய ஆலடி விநாயகர் ஆலயத்தின் ஆதீன கர்த்தாவும் பிரதம குருக்களுமாகிய சிவஸ்ரீ சு. முத்துக்குமாரசாமிக் குருக்கள் சைவக் குருமார்களின் சிவாச்சாரிய பீடாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவரின் பீடாரோகனவிழா திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளது.

## புலதும் பத்தும்

### மருந்தாக ... நெய்!

பசு நெய் மருந்தாகப் பயன்படுகிறது. எப்படி?

(1) சுடுசோற்றுடன் கலந்த நெய் குடற்புண் வெட்டை நோய் போக்குகிறது.

(2) பசு நெய்யில் மிளகை வறுத்துப் பொடி செய்து உப்புடன் கலந்து எலுமிச்சம்பழச்சாறு, உருக்கிய நெய் ஆகியவற்றைச் சோற்றோடு உண்டால் ... உடற்சூடு தணியும்; மூலத்திற் சொரியும் இரத்தம் அடங்கும்.

(3) சுக்கு, மிளகு, நற்சீரகம் ஆகியவற்றை வறுத்துப் பொடி செய்து நெய்யோடு கலந்து உண்டால் மந்தமும், பேதியும் நீங்கும்

(4) பஸ்பம், செந்தூரங்களுக்கு துணைப் பொருள நெய்.

(5) இருமல் தொல்லை தருகிறதா? சோற்றுக் கொதிநீர், நெய், பனைவெல்லம் அல்லது பனங்கற்கண்டு ஆகியன சேர்த்து எடுத்துப் பாருங்கள்...! இருமல் இருந்த இடம் தெரியாமற் போய்விடுமாம்!

— மயூரன்

## இராசி பலன்

16–04–1995

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு சித்திரை-03)

பிரதமை பிற்பகல் 4.19 வரை; சுவாதி பி. இ. 1.50 வரை சித்தயோகம், இராகு காலம் மாலை 4-34 முதல் 6.05 வரை சுபவேளை காலை 9.04 முதல் 10-34 வரை.

மேடம்: அதிகார சிறப்பு, விருந்தினர் பெருமை, பாராட்டு

இடபம்; குழந்தைப்பாசம், வாக்குவசீகரம், சமரசப்பேச்சு

மிதுனம்; எதிரிகள் துன்பம், தன்நிலை இழப்பு, கடன்படல்

கடகம்: மனக்குறை, பழையநினைவுகள், பெற்றோர் குறை

சிங்கம்: பயண ஏற்பாடு, இனிய சந்திப்பு, காரிய பலிதம்.

கன்னி: நோய் வேதனை, கற்பனை, பணியாள் சிலம்

துலாம்: அதிகாரிகள் பாராட்டு, தியாக சிந்தை, கலந்துரையாடல்

விருச்சிகம்: துஷ்டர் நட்பு, வீண்மனஸ்தாபம், வேலைபளு

தனுசு; நடைக்கஸ்டம், பகைமிகுதி, அலைச்சல்

மகரம்: அதிகாரம், சத்துரு ஐயம், இல்லச்சிறப்பு.

கும்பம்: இடையூறு, தொழில்கஸ்டம், அகங்காரம்

மீனம்: வாக்கு கலகம், யோசனை மிகுதி, தூக்கமின்மை.

— ஜோஸ்யர்

## பரீட்சை முடிவு

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (சா/த) பரீட்சை முடிவுகளில், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முடிவில் 8 டி எடுத்த மாணவி லோ.

(6-ம்பக்கம் பார்க்க)

## கிராமிய நிதிய கடன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக் குழுப்பகுதியில் கிராமியநிதியத்தினரால் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களின்வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன்கள் வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே.

இந்த வகையில் அண்மையில் உடுவில் வட்ட தாவடி கிழக்கு பகுதியில் 03 குடும்பங்களுக்கு தலா 8 000/- வீதம் மொத்தம் 24,000/ ரூபா தாவடி மத்திய சன சமூக நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

# பயிரழிவு ஏற்படுத்திய மாடு ஏலத்தில் விற்பனை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கிழக்கு பகுதியில் கமக்காணிக்குள் அத்துமீறி பிரவேசித்து பயிரழிவை ஏற்படுத்திய கட்டாக்காலி மாடு ஒன்று எவரும் உரிமை கோராததினால் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டது.

உடுவில் கம நலச்சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திரு. க. மகாதேவராசா மேற்பார்வையில் மானிப்பாய் கிழக்கு கிராம அலுவலர் திரு க. சிவகுமாரனால் மானிப்பாய் பாரதி சன சமூக நிலைய முன்றலில் வைத்து இந்த கட்டாக்காலி மாடு அண்மையில் பகிரங்க ஏலத்தில் 1350 ரூபாவுக்கு விற்கப்பட்டது.

72-சி

# தியாகி அன்னை பூபதி நினைவாக கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதியின் 7-ம் ஆண்டு நினைவுதினத்தையொட்டி வட்ட சிற்றூர் ரீதியாக இன்று 16-ம் திகதி நினைவுக் கருத்தரங்குகள் சிரமதானங்கள் நடைபெறும்.

கருத்தரங்குகள் நடைபெறும் இடங்கள் சுழிபுரம். பாணவெட்டி, சித்தன்கேணி துரட்டிப்பளை, கோண்டாவில் பகவான் கிராமம், நவாலி வடக்கு புலவர் முகாம சங்கானை காளிகோவிலடி, மிருசுவில் விக்ரம் ச. ச. நிலையம், துன்னாலை வடக்கு போதராமடம், கோயிலாக்கண்டி மகாலெட்சுமிவித்தியாலயம், ஆவரங்கால் சர்வோதயா சந்தி. சிரமதானம் நடைபெறும் இடங்கள் சுழிபுரம் பாணவெட்டி, சித்தங்கேணி தரட்டிப்பளை வி

## பரீட்சை ரத்து

(கொழும்புத்துறை)

கொழும்பு மதுவரித் திணைக்களத் தலைமை அலுவலகத்தால் கடந்த வருடம் 1994 ம் ஆண்டு வைகாசி மாதம் நடாத்தப்பட்ட மதுவரிப் பரிசோதகர், மதுவரிக் காவலாளர்களுக்கான தெரிவுப் பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

-154

## உண்ணாவிரதம்

(பண்டத்தரிப்பு)

அன்னை பூபதியின் 7ம் வருட நினைவை முன்னிட்டு பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் அனைவரும் எதிர்வரும் 18ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று சித்தன்கேணிபிள்ளையார் கோவில் முன்றலில் முழு நாள் உண்ணாவிரதம் அனுட்டிக்கவுள்ளனர்.

72

சென்னை குண்டு வெடிப்பு:

# தமிழக முதல்வர் கண்டனம்

(சென்னை)

சென்னையிலுள்ள இந்து முன்னணி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தை தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கண்டனம் செய்திருக்கிறார்.

பயங்கரவாதம் எந்த வடிவில் இருந்தாலும் அதனை மாநில அரசு உரிய விதத்தில் சமாளிக்குமெனவும் அவர் கூறியிருக்கிறார்.

இந்த வழக்கை மத்திய புலனாய்வுக் குழுவிடம் விசாரணைக்கு மாற்றவும் முதலமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார்.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாட்டுப்பிரிவு மறுமலர்ச்சி திராவிடக்கழகம் மற்றும் பல அரசியல்கட்சிகளும் கண்டித்துள்ளன.

இந்தக் குண்டுவெடிப்பில் இறந்தவர்களில் ஒருவர் இந்து முன்னணியைச் சேர்ந்தவர் என்றும் மற்றொருவர் வெடிகுண்டை வெடிக்கச்செய்தவர் என்றும் கூறப்படுகிறது (இ)

## உடுபுடவை திருட்டு

(நெல்லியடி)

வீட்டில் காயவிடப்பட்டிருந்த பெறுமதிமிக்க உடுபிடவைகள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இரவு இச்சம்பவம், வராத்துப்பளையில் இராஜகாந்தன் என்பவர் வீட்டில் நிகழ்ந்துள்ளது.

160

# மணிப்புரியில்உறுதிபடுத்தப்படாதகாணிகளை சுவீகரிக்க நடவடிக்கை

(கொழும்புத்துறை)

மணிப்புரி கிராமத்தில் வெற்றுக் காணிகளாக இருக்கும் காணிகளின் சொந்தக்காரர்கள் அக்காணிகளின் அத்தாட்சிப்பத்திரங்களைத்தாமதியாது கிராம உத்தியோகத்தருக்கு காட்டி காணி தமக்கு உரியதென உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்து.

எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாக உறுதிப்படுத்தப்படாத வெற்றுக்காணிகள் அனைத்தும் சுவீகரிக்கப்படும் என்பதை இப்பகுதிக் காணிச்சொந்தக்காரர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதி வெற்றுக்காணிகளின் உரிமையாளர்கள் தாமதியாது நேரில் சமூகம் தந்து தம்முடன் காணி தமதென உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அரியாலை தென்கிழக்கு ஜே 89 கிராம உத்தியோகத்தர் திரு. ச. தவராசா தெரிவித்துள்ளார்.

உறுதிப்படுத்தப்படாத வெற்றுக்காணிகள் அனைத்தும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரதேசச் செயலாளரினால் சுவீகரிக்கப்படும் என்று காணி சொந்தக்காரர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

154

பரந்த நிலமிருக்க பறந்து திரிவானேன்

சிறந்த வளமிருக்க சிதைந்து திரிவானேன்

# மட்டக்களப்பில் மீண்டும் அமைதி திரும்புமா?

# இராணுவத் தர்பார் தொடர்கிறது!

(மட்டக்களப்பு)

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் ஆரம்பத்தில் இருந்த எதிர்பார்ப்புக்களும், நம்பிக்கைக் கீற்றுக்களும் இன்று அற்றுப்போன ஒரு நிலையிலேயே கிழக்கு காணப்படுகின்றது. அரசுப் படையினரின் ஒவ்வொரு அசைவும் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனங்களையே தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு 'சரிநிகர்' பத்திரிகையில் வெளியான கட்டுரை ஒன்று தெரிவிக்கின்றது. அக்கட்டுரை மேலும் தெரிவிக்கையில்;

கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசின் காலங்களில் கண்கள் தோண்டப்பட்டது முதல் ரயரில் உயிருடன கிடந்து எரிபட்டது வரை பல்வேறு சொல்லொணுத் துயரங்களில் நலிந்துபோன மக்கள், சந்திரிகாவின் புதிய அரசு எம்மை இந்தக் கோர யுத்தத்திலிருந்து மீட்டெடுக்கும் என்ற நம்பிக்கை ஆரம்பத்தில் இருந்தது என்னவோ உண்மைதான். ஆனுல் சமாதானத்திற்குக் கொடுக்கும் ஆக்க ஊக்கத்தைவிட, சந்திரிகா அரசினுல் இராணுவத்திற்குக் கொடுக்கும் தீனி, பல்வேறு மடங்கு கூடுதலாகக் காணப்படுகின்றது.

கிழக்கிலுள்ள அரசுப் படைகள், அனைத்து இராணுவ முகாம்கள், பொலிஸ்நிலையங்கள் எல்லாம் 24 மணி நேரமும் உஷார் நிலையிலிருக்குமாறு மேலிடத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

அண்மையில் மட்டக்களப்புக்கு பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை விஜயம் செய்து பாதுகாப்பு நிலைமைகளை ஆராய்ந்த பின்னரே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இதைவிட பிரதி அமைச்சர் ரத்வத்த படையினர் மத்தியில் பேசும்போது: மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் தோல்வி அடைந்தால், முன்னைய அரசு போலல்லாமல் படையினருக்குத் தேவையான அனைத்தும் தரப்படும். நானும் இராணுவச் சீருடை அணிந்து களத்தில் உங்களுடன் நிற்பேன் எனப் படையினர் மத்தியில் உற்சாகத்தை அளித்துள்ளார்.

மட்டு. மாவட்டப் படை உயர் அதிகாரிகளைக் கூட்டி மட்டக்களப்பின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றியும், இனி வரும் காலங்களில் (யுத்தம் மூளுமாஞல்) வாகரைப் பிரதேசம், படுவான்கரைப் பிரதேசம் போன்ற இடங்களில் (இவ்விடங்கள் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கு முன்னரும் புலிகளின் ஆளுமைக்கு உட்பட்டிருந்த பிரதேசங்கள் ஆகும்) உடனடி நடவடிக்கைகளை எவ்வாறு கையாளுவது போன்ற விடயங்களும் மிக முக்கியமாக ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது.

மட்டு மாவட்டப் பாதுகாப்பு இணைப்பு அதிகாரி பிரிகேடியர் சரத் பொன்சேகா, அரச அதிகாரிகளையும், பிரதேசச் செயலாளர்களையும் கூட்டி ஒரு மாநாடு நடத்தினுர். அதில் புலிகளால் விடுவிக்கப்படும் எந்த நடவடிக்கைகளுக்கும் உடந்தையாகவோ. ஆதரவாகவோ இருக்கக் கூடாது என்றும் எச்சரித்துள்ளார். இதைவிடப் புலிகளின் ஆதரவாளர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஒரு சில அரச அதிகாரிகளுக்குத் தொலைபேசி மூலமும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மட்டக்களப்பில் உள்ள அனைத்து இராணுவ முகாம்களிலும், பொலிஸ்நிலையங்களிலும் முன்னரை விடப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. புதிய புதிய பங்கர்கள் அமைத்து, மண்மூடைகள் அடுக்கிப் படைகள் விழிப்பாக இருப்பதைப் பார்க்கும்போது, மக்கள் மத்தியில் பழைய அச்ச உணர்வுகள் எழத் தொடங்கியுள்ளன

வாழைச்சேனைப் பொலிஸ் நிலையம், கும்புறுமூலை இராணுவ முகாம் என்பவற்றின் முன்பாதை மணலால் நிரப்பி மண்மூடைகள் அடுக்கிப் பின்பக்சமாகவே வாகனங்களும், பொதுமக்களும் செல்வதற்கு அனுமதிக்கப்படுகிருர்கள். நகருக்குள் போவோர், வருவோர் மீதான சோதனைகளும தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அதைவிட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்குப் பின்னா மாமாங்கம், கூழாவடி போன்ற இடங்கள் படையினரால் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தப்பட்டது.

காரைதீவுப் பகுதியில் முகாமிட்டிருக்கும் விஷேட அதிரடிப்படையினர் நாளுக்கு நாள் புதுப்புது கட்டுப்பாடுகளை விதிக்கிருர்கள். சில வேளை இரவு 7 மணிக்கு பின்னர் நடமாடக் கூடாதென்பார்கள் பின்னர் நடமாடலாமென்பார்கள். திடீரென வந்து முகாமுக்கு பிடித்துப்போய் விசாரிக்கத் தொடங்குவர்.

பெற்ருேல் நிலையங்களிலிருந்து எரிபொருள் எடுத்துச் செலவதற்கும் படையினர் கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்கள். 15 லீற்றருக்கு மேம் டீசல் எடுத்துச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இது அறுவடைக் காலம் கூடுதலான எரிபொருள் தேவைப்படும் சில நாட்கள் தடை நீக்கப்பட்டிருந்த எரிபொருள் கட்டுப்பாடு திரும்பவும் படையினரால் கடுமையான முறையில் கடைப்பிடிக்கப்படுகிறது.

வாகரைப் பிரதேசம் வாவிக்கு அப்பாலுள்ள பிரதேசங்களுக்கு உணவுப்பொருட்கள் எடுத்துச் செல்வதிலும் படையினர் திரும்பவும் பலத்த கட்டுப்பாடுகளை விதித்துளளார்கள். வாகரை, மண்முனை. வவுணதீவு சோதனை நிலையங்களில் கூடுதலாக உணவுப்பொருட்கள கொண்டு செலவதற்கும், மருந்துப் பொருட்கள் கொண்டு செல்லவும் தடைவிதித்துள்ளார்கள்.

இதைவிட மார்ச்28ம் திகதி அதிகாலை இருதயபுரம் பகுதியை சுற்றிவளைத்த பொலிஸார் வீடுகளில் புதிதாக யாராவது பதியாமல் இருக்கிருர்களா? என கேட்டு சோதனையிட்டதுமல்லாமல் வீடுகளின மூலை முடுக்கெல்லாம் துருவித்துருவி சோதனையிட்டுள்ளார்கள். வீடுகளிலுள்ள எலெட்ரோனிக் பொருட்களை எதற்காக வைத்திருக்கிறீர்கள் வாங்கிய கடைப்பற்றுச்சீட்டு இருக்கிறதா எனவும் கேட்டுச் சென்றுள்ளார்கள்.

இதேவேளை மாமாங்கம் கூழாவடிக் கொலனி என்பன திரும்பவும் இரண்டாவது தடவையாக சுற்றிவளைக்கப்பட்டு சந்தேகத்துக்குரிய வீடுகளில் கிடங்கு வெட்டியும் நிலத்துக்கு கீழ ஏதாவது ஒழித்து வைத்திருக்கிருர்களா? எனவும் கேட்டு சோதனையிடப்பட்டது. பெண்களே கூடுதலாகத் துருவித்துருவி விசாரிக்கப்பட்டார்கள். புலிகளின் நடமாட்டம் பற்றியும் அவாகளின் ஆயுதங்கள் பற்றியும் பொது மக்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்

இதைவிட இரவு நேரங்களில் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தபட்டுள்ளது பார்ருேட். அரசடி போன்ற இடங்களிலுள்ள சில வீடுகளைத் தட்டியெழுப்பி பொதுமக்களை திடீர் திடீரென அதிர்ச்சிக்குள்ளாக வைத்திருக்கிருர்கள் பொலிஸார்

அண்மையில் மட்டக்களப்பு மேயர் செழியன் பேரின்பநாயகத்தின் வீட்டை கூட நள்ளிரவில் சென்ற பொலிஸார் துருவித்துருவி தேடுதல் நடாத்தியுள்ளார்கள் இந்நடவடிக்கையென்பது இங்குள்ள எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

கடும் கெடுபிடிகள் நிறைந்த சோதனைகளு புதிய புதிய காவலரண்களும் திறந்து கொண்டேயிநக்கிறது. புலனாய்வுப்படையினரும் தீவிரமாக தகவலகளை சேகரித்து வருகிருர்கள். இவர்களுக்கு உதவியாக தமிழ் குழுக்களும் செயற்பட்டு வருகின்றன இந்த நடவடிச்கைகள் எந்தளவுக்கு சமாதானத்தைதரப் போகிறது என்பதுதான் இன்றைய கேள்வி. சி

## இன்று

(யாழ்ப்டாணம்)

தெல்லிப்பளை ஸ்ரீகாசி விநாயகர் ஆலய 23வது ஆண்டு வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 8-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 24ம் திகதி தேர்த்திருவிழாவும், 25ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (சி)

0 0 0

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை பவள விழா இன்று ஞாயிறு மாலை 5 மணிக்கு வித்தியாசாலை மைதானத்தில் சைவப்பெரியார் திரு. மு ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும். சிறப்புரைகள், கௌரவிப்புகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

0 0 0

(சொழும்புத்துறை)

கொழும்புத்துறை எழிலூர் ஐக்கிய விளையாட்டுகழகத்தின் வருடாந்த உயிர்ப்பு ஞாயிறு விளையாட்டு விழா இன்று 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணிக்கு திருப்பலிப் பூசையுடன் கழகத்தலைவர் திரு பெனடிற் லகஸ்மன் தலைமையில் இடம்பெறும். இரவு 6-30 மணிககு பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும். -154

## அந்நியநாட்டில் அடிமையாவதைவிட இங்கு சுதந்திரமாக இருப்பது மேல்!

(யாழ்ப்பாணம்)

அன்னிய நாட்டில் சென்று அடிமைகளாக வாழ்வதைவிட எமது மண்ணில் சுதந்திரமாக வாழ்வது மேலானது. இந்த வகையிலேயே இன்றைய போராட்டம் நடைபெற்று வருகிறது. எமது வீரம் செறிந்த போராட்ட வரலாறு வீரர்களின் தியாகம், நிதானமான தலைமைத்துவம் என்பனவற்றை இன்று உலகம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது.

யாழ். கந்தர்மடம் ஆலடிச் சந்தியில், மேஜர் சுபாஸ் உட்பட நாலு மாவீரர்களின் 6ம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகம் ஈகச்சுடரை ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின உறவினர்கள், போராளிகள் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினுர்கள்

செல்வி தணிகைச் செல்வி தொடர்ந்து உரையாற்றுகையில், தேசத்தை மீட்பதற்கு அனுப்பப்பட்ட குண்டுமோசம் செய்துவிட்டதில் இந்த நாலு மாவீரர்களும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். உலகில் நாலாவது வல்லரசு என்று கூறிக்கொண்டு எம்மை எல்லாம் காப்பாற்றுகிருேம். எமக்கு உதவுகிருேம் என்கின்ற கபடத்தனத்துடன் வந்து தமிழீழப் பிரதேசத்தை ஆக்கிரமித்த இந்திய அமைதிப் படையை எமது வீரர்கள் எதிர்கொண்டார்கள். இவர்களின் இந்த ஆக்கிரமிப்பை முறியடிக்கச் சென்ற வேளையிலேயே வெடிமருந்து நிரப்பப்பட்ட குண்டு வெடித்ததில் இந்தநால்வரும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்கள்.

எமது வீரர்கள் இந்தமண்ணை நேசித்தார்கள். எமது மக்களை நேசித்தார்கள். எமது மண் பாதுகாக்கப்படவேண்டும். எமது மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்கின்ற தியாக உணர்வே இன்றைய எமது போராட்டமாகும். இந்த மாவீரர்களின் தியாகம் போற்றப்படவேண்டும் என்ருர்.

கடற்புலிகள் உறுப்பினர் திரு. இளையவன், புலிகளின் குரல் வானெலியைச் சேர்ந்த திரு. வின்சன் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினுர்கள். 162-சி

## முட்டை விலை வீழ்ச்சி

(அரியாலை)

யாழ். நகர்ப் பகுதியில் முட்டை பெருமளவு வந்துள்ளதால் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. முட்டை ஒன்று 5 ரூபாவாக தற்பொழுது விற்கப்படுகின்றது. 59

## விளையாட்டுப் போட்டி

(கொழும்புத்துறை)

அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையத்தின் 45-வது ஆண்டு நிறைவு விழா இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30மணிக்கு நிலையத்தலைவர் திரு. செ. கந்தையன் தலைமையில் நடைபெறும்

பிரதம விருந்தினராக உதவிப் பிரதேசசெயலாளர் திரு. சி. இளங்கோவன். யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. கே. பதமநாதன் சிறப்பு விருந்தினராகவும் பங்கு பற்றி சிறப்பிக்கவுள்ளனர்.

இரவு 8 மணிக்கு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும் -154

## நீரிறைக்கும் இயந்திரம் வாடகைக்கு விடப்படுகிறது

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் நீர் இறைக்கும் இயந்திரத்தைசகாயவிலையில் சங்க உறுப்பினர்களுக்கு வாடகைக்கு கிணறு இறைப்பதற்கு விடுவதற்கு தீர்மானித்துள்ளது

கெயர் நிறுவனத்தினுல் சங்கத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களே இவ்வாறு வாடகைக்கு விடப்படவுள்ளது. ஒரு மணித்தியாலத்திற்கு 30 ரூபா கட்டணமே இதற்கு அறவிடப்படுமென்றும், எரிபொருளை வாடகைக்கு பிடிப்பவரே செலுத்தவேண்டுமென்றும்சங்கானை சந்தைக்கு சமீபத்திலுள்ள சங்கக் கிளையில் தொடர்பு கொண்டு வாடகைக்கு இந்த நீர் இறைக்கும் இயந்திர சேவையை சங்க உறுப்பினர்கள் பெற்றுக் கொள்ளமுடியுமென்றும் சங்க உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (72-சி)

பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க

## சகல ஊழியர்க்கும் போனஸ் கிடைக்கும்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் கடந்த 1992/93 வருட நிதி ஆண்டுககான இலாபப் பங்கீடு (போனஸ்) பணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கானதீர்மானம் ஒன்று அண்மையில் நடைபெற்ற சங்கத்தின் 15-ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. சங்கத் தலைவர் செ. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 1992 93 வருடப் பகுதியில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும், இக்காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தில் அனுமதி கிடைக்கப்பெற்ற சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கும் உயர் கல்விக்கான உதவிப் பணம் வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு கூட்டுறவு பிரதி ஆணையாளரும், வலி தென் மேற்கு பிரதேச செயலாளருமான திரு. து. வைத்திலிங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சங்க உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். 72-சி

## தந்தை செல்வா நினைவஞ்சலி

(கொழும்புத்துறை)

தந்தை செல்வாவின் 18வது ஆண்டு நினைவு வழிபாடுகள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் எதிர்வரும் 26ம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது. (154)

# 'மே'நாளை சிறப்பிக்கும் முகமாக முன்னேடி ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

1995 மே நாள் சிறப்பாகவும், எமது மக்களது அபிலாசைகளைப் பிரதிபலிப்பதாகவும் அமையவேண்டும் எனும் நோக்கில், வெகுஜன அமைப்புகள், தொழிற்சங்கங்கள் கூட்டுறவு மற்றும் அரசகூட்டுத்தாபன ஊழியர்கள் மே நாளுக்கான முன்னேடி ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்

மேநாளின் மேன்மையை உழைக்கும் மக்களது உறுதியை வெளிக் கொணரும் வகையில் முன்னேடிக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

தமிழீழ மக்களது நாளாந்த பிரச்னைகளைப் புறந்தள்ளிவிட்டு, தம்மால் திணிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை முற்றுக நீக்க மறுத்து, சமாதானம் எனும் போலி முகங்காட்டிவரும் பேரினவாத சிறிலங்கா அரசின் கபடத்தினை அனைவரும் புரிந்துகொண்டு வருகின்றனர்.

இராணுவ முற்றுகைக்குள்ளாக்கப்பட்டுள்ள தமிழ் மக்களது நாளாந்த பிரச்னைகளை தமது மேலாதிக்க இராணுவ நலன்களுடன் இணைத்துப்பார்க்கும் சிறிலங்கா அரசினது, மெய்யான நிலைப்பாட்டை எடுத்தியம்புவதாக இம்முறை மேநாள் முன்னெடுக்கப்படும். பேரணி, பொதுக்கூட்டம், கலை நிகழ்வுகள் யாவும் பேரினவாதக் கொடூரத்தினின்றும் தமிழீழ மக்கள் தம்மைத் தாமே தற்பாதுகாப்பதை முன்னிலைப்படுத்துவதாக விளங்கும் வழமைபோன்றபேரணியின் ஊர்திகளும் இடம்பெறும் இன்றைய வரலாற்றுக் கட்டத்திற்கேற்ப சித்தரிப்புக்களைக் கொண்டுள்ள சிறந்த ஊர்திகளுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான போட்டிகளும் உச்சமாகவே இருக்கும்.

தேசிய விடுதலைப்போராட்ட வரலாறும், மனதைத்தொடும் சம்பவங்களும், பேரினவாதம் தோற்றுவித்த பொருளாதாரத் தடைகள் மத்தியிலும், உழைக்கும் மக்கள் முனைப்பாகச் செயற்படுவதால், சுயசார்புப் பொருளாதார மேம்பாடு, பேரினவாதத்தின் இன்றைய பல்வேறு முகங்கள், சிறிலங்கா அரசின் தமிழீழ மக்களை ஏமாற்றி திசைதிருப்பும் திட்டங்கள், மக்கள் அனைவரும் கூட்டாகச் செயற்பட்டு, பலம் பெறல், பெண்விடுதலை, சுரண்டலற்ற, அறிவியல் சார்ந்த சமுதாயத்தை உருவாக்க மக்களது பங்களிப்பு, எம்மீதான அனைத்துலகப் பார்வை.

மேற்கூறியவற்றை தத்ரூபமாக சித்தரிக்கும் ஊர்திகளே பரிசுகளுக்காகத் தெரிவுசெய்யப்படும். வரும் 17-04-1995 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் நடைபெறவுள்ள மே நாள் குறித்த விசேட கலந்துரையாடலில், வெகுஜன அமைப்புகள், அரச கூட்டுத்தாபன கூட்டுறவு, தனியார் துறை ஊழியர் சங்கங்கள், கூட்டுறவுத்துறை இயக்குனர் சபை உறுப்பினர்கள், கிராமிய அமைப்புகள், மாதர் அமைப்புகள், மற்றும் சனசமூக நிலைய, விளையாட்டுக் கழக நிர்வாகிகள் முதலியோர் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# கால்நடைகளுக்கான வைத்திய சிகிச்சை

(பருத்தித்துறை)

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில கிராமங்கள் தோறும் பசுக்களுக்கான கர்ப்பச் சிகிச்சை, கர்ப்பப் பரிசோதனை என்பனவற்றை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி மேற்கொண்டுள்ளார்.

கால்நடைப் பகுதி டாக்டர் ஆர். எஸ் நவரட்ணம் கால்நடைகளுக்கான வைத்திய சிகிச்சைகளை வழங்குகிறார்.

அத்துடன் பசுக்களுக்கான கர்ப்பச சிகிச்சை முகாம் மாதந்தோறும் தெரிவு செய்யப்பட்டகிராமங்களில் நடாத்தப்பட்டு வருவதாகவும் கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். -52

# கிராமிய சமூக மேம்பாட்டு ஆசிரியர் கருத்தரங்கு

(உடுவில்)

வலிகாமம் கல்விக்கோட்ட கிராமிய சமூக மேம்பாட்டு ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சிக் கருத்தரங்கு மானிப்பாய் . மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடத்தப்பட்டது.

ஸ்ரீ பாரதி பாடசாலை அதிபர் திரு. கு. கேசவன் தலைமையில் நடைபெற்ற இப் பயிற்சி வகுப்புக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக பிரதி கல்விப்பணிப்பாளர்கள் திரு. த. துரைசிங்கம், திரு.ப. விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழீழ தேசிய கொடியை வலிகாமம் கோட்டப் பொறுப்பாளர் ஏற்றினர். கிராமிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் திரு. கே பாப்பா ஈகைச் சுடரை ஏற்றிவைத்தார்.

கருத்தரங்கில் கிராமிய மக்களுடையதும், மாணவர்களினதும் எண்ணங்கள்பற்றி யாழ். மாவட்ட அரசியல் துறையைச் சேர்ந்த திரு. அரசண்ணவும், எமது இயக்கமும் இன்றைய நிலைப்பாடும் பறறி தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு டொமினிக்கும், மாணவர் கல்வி வளம்படுத்தல் பற்றி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ், சி. எஸ். சிதம்பரநாதனும், மற்றும் அதிபர் திரு. சி நாகராசா. யாழ். பல்கலைக் கழக வர்த்தகத்துறை விரிவுரையாளர் திரு. இ. இரட்ணம் ஆகியோரும் கருத்துரைகள் வழங்கினர், 109-ரி

# "எமது தேசியத்தை வளர்க்க முயற்சிகள் எடுக்க வேண்டும்"

## — புதுவை இரத்தினதுரை

[யாழ்ப்பாணம்[

இழந்த உரிமைகளை வென்றெடுப்பதுடன் எமதுதேசியத்தையும் வளர்த்தெடுப்பதற்கு நாம் முயற்சிகளை மேற கொள்ளவேண்டும். இன்றைய மாணவர் பருவம் நாளைய மனிதனின் பருவம். எமது மாணவர்கள் மத்தியில் கல்வியைப் போதிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது கலை, கலாச்சாரம் பண்பாடு போன்ற எமது தேசியததையும் நாம் வளர்த்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கலை. பண்பாட்டு அவையினரால் நடத்தப்பட்ட கலைப பூங்கா நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொணடு விடுதலைப் புலிகள கலைப்பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. இன்பன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மங்கள விளக்கை கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் ஏற்றி வைத்தார்.

திரு புதுவை இரத்தினத்துரை தொடர்ந்து உரையாற்றுகையில் நாம் இன்று பல வகையான துன்பங்கள், கஷ்டங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த வகையான துன்பஙகள் கஷ்டங்களை எமது அடுத்த சந்ததிக்கு நாம் விட்டுச் செல்லக்கூடாது. எமக்குக் கிடைக்காத சகல வசதிகளும் எமது அடுத்த சந்ததிக்குக் கிடைக்க வேண்டும். எமது அடுத்த சந்ததி சுதந்திரமாகவும், சுபிட்சமாகவும், சகல உரிமைகளுடனும் வாழவேண்டும் என்பதற்காகவே இன்றைய போராட்டம் நடைபெறுகின்றது.

மாணவர் பருவம் கல்விக்குரிய காலமாகும். இந்தப் பருவத்தில் நாம எமது கலவியில் மேலோங்கி நிற்கவேண்டும். உலக நாடுகளுடன் சரிநிகர் சமமாகப் பழகுவதற்குக் கல்வி அவசியம். ஆனால் நாம் நிலையாக வேரூன்றி நிற்பதற்கு ஒரு நிலம் எமக்கு அவசியமாகிறது. நாம் ஒரு நிலையாக நிற்பதாகவே இன்றைய போராட்டம் நடைபெறுகின்றது.

மாணவரின் முழுமையான வளர்ச்சிக்குக் கலவி இருந்தால் பட்டும் போதாது. கலை பண்பாடுகளும் இணைந்திருக்க வேண்டும். ஒரு மாணவனின் உள்ளத்தில் நல்ல பண்புகளை வளர்த்தெடுக்கவேண்டும். சமுதாயத்தில்ஒருமுழுமனிதனைத் திகழவேண்டுமாயின் மாணவர்கள் மத்தியில் கலை, கலாசாரம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். மாணவர்கள் மத்தியில் இந்த உணர்வுகளை எடுத்துக் காட்டவேண்டும்.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் அருட்திரு யோசேப் பிரான்சிஸ் அடிகள் ஆகியோர் சிறப்புரையாற்றினர்கள் பாடசாலைமாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(162-ரி)

## வீரவணக்கமும நினைவுக்கல் நாட்டலும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 10 திகதி திருமலையில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த வீரவேங்கை பாரதிதாசன்/மதி [கிருஷ்ணபிள்ளை கிருஷ்ணரஞ்சன், காங்கேசன்துறை, மோகன் வீதி, ஊரெழு கிழக்கு) யின் வித்துடல் திருமலையில்விதைக்கப்பட்டுவிட்டமையால், அவரது திருவுருவப்படம் இன்று 15ம் திகதி மாலை 4 மணிக்கு பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் அவரது இல்லத்திலிருந்து [எடுத்துச் செல்லப்பட்டு ஊரெழு கிழக்கு வளர்பிறை ச. ச. நிலயத்தில் மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டு அங்கு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற மீண்டும் அணிவகுப்பு மரியாதையுடன்கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மாவீரரது நினைவுக்கல் நாட்டப்படும்.

## மீனவர்களுக்கான வலை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் 18 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளை வறுமைக்கோட்டின் கீழ் வாழும் கடற்றொழிலாளர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கியதன் மூலம் பெருமளவான கடற்றொழிலாளர்கள் நன்மை பெற்று வருகின்றனர்.

வடதமிழீழத்தில் வருமானம் குறைந்த கடற்றொழிலாளர் குடும்பங்களை இனங்கண்டு அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த, அவர்களுக்கு தேவையான வலைகளை கடனாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கடல்வள அபிவிருத்திப் பகுதி வழங்கியுள்ளது. ஒருவருக்கு ரூபா 5000/- பெறுமதியான வலைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கரபந்தாட்ட போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பவானி விளையாட்டுக் கழக 2-ம் ஆண்டு நிறைவு விழாவையொட்டிய கரபந்தாட்ட (ஒவர்கேம்) சுற்றுப் போட்டி இன்று வண்ணை சிவன் வடக்கு வீதியில் ஆரம்பமாகிறது.

மூன்று நாட்கள் பகலிலும் இரவிலும் நடைபெறும் இச் சுற்றுப்போட்டியில் 40 கழகங்கள் பங்குபற்றுகின்றன. -சி

## பவள விழா

(யாழ்ப்பாணம்)

கலைப் புலவர்மணி, வித்துவான் திரு வ. செல்லையாவின் பவள விழா, நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு மானிப்பாய் சோதிவேம்படி காளியம்பாள் ஆலயத்தில் திரு. சி. இராமதிலகம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறைப் பேராசிரியர் டாக்டர் க பாலசுப்பிரமணியம் கலந்துகொள்வார்.

ஆசியுரையை சிவஸ்ரீ மகேஸ்வரக்குருக்களும், அருளுரை மெய்கண்டதேவர் ஆதீனம் குருமகா சந்நிதானம் சீலத்திருசித்தாந்த சரஞானப் பிரகாசசிவம், கைலை சர்வோதய ஆதீனம் ஸ்ரீ சிவபாலசுந்தரனர் சுவாமிகள் ஆகியோர் வழங்குவார்கள்.

# கால் நடை கன்றுகள் இலவச பராமரிப்பு

(உடுவில்)

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பிரமாண அடிப்படையிலான இவ்வருட மூலதன ஒதுக்கீட்டின்கீழ் கால்நடைகளுக்கான செயற்கைமுறை சினைபடுத்தலின் பயனாக இவ்வருடம் தை மாதத்திலிருந்து பிறக்கும் கன்றுகள் அனைத்துக்குமான முதல் மூன்று மாதகால பராமரிப்புக்கள் தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் பிரிவினூடாக இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய இப்பிரிவில் உள்ள கால்நடையாளர்களின் கால்நடைகள் செயற்கை முறைச் சினைப்படுத்தல்மூலம் பிறக்கும் கன்றுகள், இப்பகுதி கால்நடை வைத்தியரினதும், கால்நடை அபிவிருத்தி போதனாசிரியரினதும் கண்காணிப்பின்கீழ் மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும்.

இக்காலகட்டங்களில் கன்றுகளுக்குத் தேவையான பூச்சி மருந்து, கனிப்பொருட் கலவை, நோய்க்கான மருத்துவ சிகிச்சை போன்றன இலவசமாக வழங்கப்படும்.

109-ரி

## ஊழல், கொலை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லையா என்பதை கண்டறிவதற்கு தற்போதைய அரசாங்கம் ஒரு ஆணைக்குழுவொன்றை நியமித்து விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுள்ளார்

பலர் என் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டிருக்கின்றார்கள் ஆகவே ஆணைக்குழு விசாரணையை நடாத்தி நான் இவற்றில் சம்பந்தப்படவில்லை என்று அறிவிக்கவேண்டுமென்று சிரிசேன கூரே தெரிவித்தார்.

(ம-ரி)

## வீடு வெறிச்சோடிப் போனது எடா சிவானந்தா!

புது வருடம் வந்தது எடா—சிவானந்தா!—உன்
புன்னகையும் போனது எடா சிவானந்தா!
புத்தாண்டு வந்தது எடா சிவானந்தா - உன்
புன்னகையைக் காணன் எடா சிவானந்தா
வீட்டுக்குப் போனன் எடா சிவானந்தா—வீடு
வெறிச் சோடிக் கிடந்தது எடா சிவானந்தா!
பாட்டைப்போல் மனைவி அழுதாள் நண்பா—உன்
பாலர்களும் அழுதனரே சிவானந்தா
காட்டு எருமை வாகனத்தில் வந்த அந்த—கொடும்
காலன் உன்னைக் கவர்ந்தானே சிவானந்தா
நாட்டுக்குச் சேவை செய்த சிவானந்தா—உனக்கு
நாவூறு பட்டது எடா சிவானந்தா
மீட்டும் இங்கு வருவாயே சிவானந்தா—மன
வீட்டில் இருக்கின்றாய் நீ சிவானந்தா.

(சி-1454) — பாவலவன் பா. சத்தியசீலன்

சர்வதேச நாணய நிதியத்திற்கு

# அறுபது கோடி ரூபா கடன் இலங்கை செலுத்த வேண்டும்

[கொழும்பு]

சர்வதேச நாணய நிதியத்திற்கு இலங்கை அரசு ஆறு கோடி ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது.

1994 டிசம்பருக்குப்பின் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் கடனுதவி எதுவும் வழங்கவில்லை.

இதேவேளை சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்தத் திட்டத்திற்கு மேலும் சலுகைகளுடன் கூடிய கடன்களை வழங்குவது தொடர்பாக இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டதாக நாணய நிதியத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். -ரி

# சவூதியில் மூவருக்கு சிரச்சேதம்

(றியாட்)

சவூதி அரேபியாவில் கடந்த வெள்ளிக்கிழமை மூவர் சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

போதைவஸ்துக்கடத்தல் மற்றும் பாலியல் வன்முறை போன்ற செயல்களில் ஈடுபட்டமைக்காகவே இவர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் பிரஜை, பிலிப்பைன்ஸ் பிரஜை உட்பட மூவர் இவ்வாறு சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

1993ம் ஆண்டு 69 பேர் வரையில் இவ்வாறு சவூதி அரேபியாவில் சிரச்சேதம் செய்யப்பட்டனர். க-சி-

## சித்திரைக் கஞ்சி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்-மத்தி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த சித்திரைக் கஞ்சி வார்ப்பு வைபவம் இன்று சனிக்கிழமை பகல் நடைபெறவுள்ளது.

## குமண வருகிறது

(நெல்லியடி)

கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிய குமண கப்பல், ஞாயிறு அல்லது திங்கள் காலை பருத்தித்துறையை வந்தடையும்.

இக் கப்பலில் யாழ் தபால் திணைக்களத்திற்குரிய தபால் பொதிகளும் எடுத்துவரப்படவுள்ளதாக துறைமுகவட்டாரங்கள் தெரிவித்தன. 160-ரி

## உண்ணாவிரதம்

[பண்டத்தரிப்பு]

தியாகி அன்னை பூபதியின் 7-ம் வருட நினைவை முன்னிட்டு சங்கானை வர்த்தகர் சங்கத்தின் ஆதரவில் சித்தன் கேணி மகா கணபதிப் பிள்ளையார் ஆலய வீதியில் எதிர் வரும் 17-ம், 18-ந் திகதிகளில் உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது. -72

# 'தலசீமியா' நோய் வேகமாக பரவுகிறது

(கொழும்பு)

தலசீமியா என்னும் ஒரு வகை புதிய நோய் தற்போது வெகுவேகமாகப் பரவிவருவதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

செங்குருதிச் சிறு துணிக்கைகள் தமது வேலையை சரிவர செய்ய இயலாமையினால் இந் நோய் தோன்றுகிறது.

ஒட்சிசனை உடலின் சகல இழையங்களுககும் கொண்டு செல்லும் வேலையினை செங்குருதிச் சிறுதுணிக்கைகள் மேற கொள்கின்றன. தலசீமியா நோய் ஏற்பட்டால் செங்குருதிச் சிறுதுணிக்கையின் செயறபாடு ஸ்தம்பித்து போகும் அபாயம் ஏற்படும்.

உலகம் முழுவதிலும் 2·5 மில்லியன் மக்கள் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் மட்டும் 600 நோயாளிகள் இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

பரம்பரை நோயான இதனால் பீடிக்கப்பட்ட குழந்தைகளில் வெளிறிக் காணப்படுதல், வாந்தி எடுத்தல் போன்ற தன்மைகள் காணப்படும்.

இந்நோயை கட்டுப்படுத்த வென கொழும்பில் ஒரு ஆய்வு நிலையமும் நிறுவப்பட்டுள்ளது. க-சி-ரி

## 5ம் கட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரிகா, தலைவர் பிரபாகரனுக்கு இறுதியாக அனுப்பி வைத்துள்ள கடிதம் மிகவும் முக்கியமானது என்று தமிழ் அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். ரி

தென்னாபிரிக்காவில்

# அமைச்சரவையிலிருந்து வின்னி மீண்டும் நீக்கம்

(ஜொகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்கா ஜனாதிபதி நெல்சன் மண்டேலா பிரிந்து வாழும் தன்னுடைய மனைவி வின்னி மண்டேலாவை மீண்டும் அமைச்சரவையிலிருந்து நீக்கியுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு வின்னி மண்டேலா தனது பதவியை துஷ்பிரயோகம் செய்ததற்காக அமைச்சரவையிலிருந்து ஜனாதிபதி மண்டேலா விலக்கினார்.

தன்னை அமைச்சரவையிலிருந்து நீக்கியதை எதிர்த்து வின்னி மண்டேலா நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்தார். ஜனாதிபதி மண்டேலா சட்டவிதிகளுக்கு முரணாக நடந்துகொண்டார் என நீதிமன்றம் தீர்ப்பளித்ததால் வின்னி மண்டேலாவை அமைச்சரவையில் ஜனாதிபதி மண்டேலா இணைத்துக் கொண்டார். தற்பொழுது வின்னிமண்டேலாவை அவர் மீண்டும் அமைச்சரவையிலிருந்து நீக்கிவிட்டார். வி ரி

## மாணவருக்கு பாராட்டு

[உடுவில்]

1994ம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் பாடசாலையில் நடைபெற்ற விழாவில் பாராட்டப்பட்டு தங்கப் பதக்கங்களை பெற்றுக்கொண்டுள்ளனர்.

செல்வன் ஐ. சதானந்தன் என்பவர் கணிதபிரிவில் 4ஏ பெற்று யாழ்ப்பாண மாவட்டத்தில இரண்டாமிடத்தையும் தேசிய மட்டத்தில் 4ம் இடத்தையும் பெற்றுள்ளார்.

அதேபோல செல்வன் செ. யேசுதாஸ் கலைப்பிரிவில் 3ஏ 1பி பெற்று மாவட்ட மட்டத்தில் ஏழாம் இடத்தை பெற்றுள்ளார். 109

## மூளை மலேரியா இளைஞர் மரணம்

[நெல்லியடி]

மூளை மலேரிய நோயினால் பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் கடந்த சனிக்கிழமை பிற்பகல் மந்திகை மருத்துவமனையில் மரணமானார்.

புலோலி கிழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த மாணிக்கவாசகர் கமலேந்திரன் (வயது 20) என்னும் இளைஞரே இவ்வாறு மரணமானவராவார். -160

# க. பொ. த. (சா/த) பரீட்சை மேலும் சில முடிவுகள்

(நெல்லியடி)

கடந்த வருடம் நடைபெற்ற க. பொ. த. (சா/த) பரீட்சையில் மேலும்சில பாடசாலைகளின் பெறுபேறுகள்.

**பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி**

8டி ஒருவர் செல்வி ஜெயந்தினி தணிகாசலம், 6டி ஒருவர் 4டி மூவர்

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி**

8டி ஒருவர் கிருஷ்ண பிள்ளை சுரேந்திரன், 7டி ஐவர், 6டி 8 பேர்,

**நெல்லியடி மத்திய மகளிர் கல்லூரி**

8டி ஒருவர் செல்வி ஸ்ரீ ரேணுகா

**கரவெட்டி விக்கினேஸ்வரா**

5டி 3சி பன்னிரண்டு பேர்

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை**

7டி ஒருவர் செல்வி ஜெயகௌரி புஸ்பநாதன், 6டி 4 பேர், 5டி 6 பேர், 4 டி 11 பேர்.

**பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம்**

4டி ஒருவர்

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

8 டி ஒருவர்

**மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்**

5டி 2சி 1எஸ் ஒருவர், 3டி 4சி 1எஸ் இருவர், 2டி 4சி 2எஸ் மூவர், 1டி 22 பேர்

**யா/அத்தியார் இந்துக் கல்லூரி-நீர்வேலி**

6டி 2சி ஒருவர் 5டி 3சி ஒருவர், 4டி 3சி ஒருவர், 3டி 3சி 2எஸ் ஒருவர், 2டி 4சி 2 எஸ் 3 பேர் 1டி -சி, 3 எஸ் 13 பேர் 109-ரி

## அரசு-புலிகள் இடையி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இந்த விஜயத்தின் போது இந்திய அரசுக்கு எடுத்துரைப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாரிஸில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் முடிவடைந்த பின்ரும் ஒரு சில தினங்கள் ஜனாதிபதி சந்திரிகா பாரிஸில் தங்கியிருப்பார். இதனைத் தொடர்ந்து மே 2-ம் திகதி அவர் புதுடில்லி புறப்படுவார்.

மே 3-ம், 4-ம் திகதிகளில் சார்க் தலைவர்களின் உச்சி மாநாடு புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

இரண்டு மாதகாலப் பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவிற்கு மேற்கொள்ளும் இரண்டாவது விஜயம் இதுவாகும்.

இதேவேளை நாளை ஞாயிற்றுக்கிழமை இந்தோனேஷியா பயணமாகும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அங்கிருந்து புதுடில்லி சென்று ஜனாதிபதி சந்திரிகாவுடன் சார்க் மாநாட்டில் கலந்து கொள்வார். இ-ரி

## வடபகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேற்றியுள்ளது. இதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்'' என்று தெரிவித்தார்.

இராணுவத் தளபதி நேற்று பலாலி, வசாவிளான், பூநகரி, மண்டைதீவு, ஆனையிறவு ஆகிய இராணுவ முகாம்களுக்குச் சென்று இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றியுள்ளார். இராணுவத்தளபதியுடன் இராணுவ சேவா வனித்தா பிரிவின் தலைவி லலிதா டி சில்வாவும் சென்று இராணுவத்தினருக்கு பல பொருட்களை பரிசாக வழங்கியதாவும் செய்திகள் தெரிவிக்கின்றன. வி-ரி

## சென்னையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்திற்கு முஸ்லிம் தீவிரவாதிகளே காரணமென பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்,

இக்குண்டு வெடிப்பை அடுத்து சென்னையிலுள்ள முஸ்லிம் மகுதிகள் யாவும் பொலிசாரினால் தீவிர சோதனை நடவடிக்கைகளுக்குள்ளானது. ரி

## அரசு—புலிகள்

(1ம பக்கத் தொடர்ச்சி)

காண மூன்றுமாதகால அவகாசம கேட்டிருக்கிறார். இதன மூலம் அவர் தன்னைஒரு பேரபேச்சு வல்லுநராக இனம் காட்டியிருக்கிறார் என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். ரி

## உயர்மட்ட

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கலந்துரையாடல் நடைபெற்றது.

4-ம் கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவண. கெனனத் பெர்ணண்டோ, கலாநிதி ஜெயதேவ உயாங்கொட, திரு. சார்ள்ஸ் அபயசேகரா ஆகியோர் கொழும்பிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் நுவரெலியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்கள் கேணல் அனுருத்த ரத்வத்த, பேராசிரியர் ஜீ. எல். பீரீஸ், லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரும் கலந்து கொண்டனர். -ரி

## கடத்தலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் கடத்தல்களை முறியடிப்பதற்காக நவீன இயந்திரங்களும் தற்போது பொருத்தப்பட்டுள்ளன. இந்த இயந்திரங்கள் மூலம், பயணிகளின் பொதிகளில் இருக்கும் கடத்தல் பொருட்களை மிக எளிதில் கண்டு பிடிக்க முடியும் என்றும் சுங்கப் பகுதியினர் தெரிவித்தனர். வி-ரி

## மட்டு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. சுற்றிவளைப்பு, கைது நடவடிக்கை உட்பட தமிழர் மீதான கெடுபிடிகளும் நாளாந்தம் அதிகரித்து காணப்படுகிறன,

மட்டு மாவட்டத்தில் படையினரின் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் எந்தளவுக்கு சமாதானத்தைத் தரப்போகின்றது என்பது தான் இன்றைய கேள்வி என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

மட்டு நகரில் தற்போது இரவு நேரங்களில் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதுடன் இரவு நேரங்களில் திடீர் திடீரென பொதுமக்கள் குடியிருப்புக்களுக்குள் சென்று மக்களை துன்புறுத்தியும் வருகின்றனராம். ரி

ஷார்ஜா கிரிக்கெட்

# ஆசிய கிண்ணத்தை இந்தியா வென்றது

(ஷார்ஜா)

ஷார்ஜா கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா- இலங்கையை 8 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்று ஆசியக் கிண்ணத்தை தட்டிக்கொண்டது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 230 ஓட்டங்களைப் பெற்றது. குருசிங்கா 85 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்தியா 41-1 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 233 ஓட்டங்களைப் பெற்றது. கப்டன் அசாறுடீன்-90 ஓட்டங்களுடனும், சித்து 84ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தார்கள். டென்டுல்கர்- 41, மனோச்பிரபாகர்- 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இக்கிரிக்கெட் போட்டித் தொடரில், சித்து சிறந்த ஆட்டக்காரராகவும், அஸாறுடீன் இறுதியாட்டத்தில் சிறந்த ஆட்டக்காரராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு ஆசிய வெற்றிக் கிண்ணத்துடன் 'நூர்க் கான்' சுழல்கேடயமும் 30ஆயிரம் அமெரிக்கடொலரும் பரிசாகக்கிடைத்தது. வி-ரி

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது, Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Lieence number B/1633613,